# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் 03.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 21350/SCIC/2023</u>**

திரு வி. அலெக்ஸ் பாண்டியன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
செங்கல்பட்டு. --- பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 17.11.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். 5 செண்ட் நிலம் பதிவு செய்ய சார்பதிவாளர் மற்றும் பதிவாளர்களுக்கு பதிவுத்துறை அலுவலகத்திலிருந்து ஏதேனும் சுற்றறிக்கை அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றும் அவ்வாறு ஆம் எனில் அதன் நகல், 5 செண்ட் நிலம் பதிவு செய்ய நகராட்சியில் வரன்முறைப்படுத்தி ஏதேனும் ஒப்புதல் வாங்க வேண்டுமா என்றும் ஆம் எனில் அதன் விவரம் என்பன போன்ற தகவல்களை 6 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார். மனுதாரரின் மனுவானது உரிய தகவல்களை வழங்கும்பொருட்டு சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 08.12.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் , மாவட்ட பதிவாளர்

அலுவலகம், செங்கல்பட்டு என்ற முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மனுதாரர் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 29.11.2023 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 19.12.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 12.12.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது SA 21350/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக 19.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது மனுதாரர் 28.02.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.06.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலர்களுக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது.** பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி P. புனிதா, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், செங்கல்பட்டு ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 19.12.2023 தேதியிட்டு இனவாரியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனைத்தொடர்ந்து 19.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மீண்டும் தகவல்கள் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அக்கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அத்தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. அதனடிப்படையில் மனுதாரர் கோரிய தகவல்களில் இனம் 1,2 மற்றும் 6 ஆகியவற்றிற்கு மட்டும் பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. இனங்கள் 3,4,5 ஆகியவற்றிற்கு உரிய பொது அதிகார அமைப்பிற்கு மனு செய்து தகவல்கள் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஆணையத்தால் ஏற்க இயலாது என்பதை ஆணையம் பொதுத் தகவல்

அலுவலருக்கு எடுத்துரைக்கிறது. இந்நிகழ்வில் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மனுதாரரின் மனுவானது உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்யப்படவில்லையென்பது தெளிவாகிறது.

6. எனவே, **பொது தகவல் அலுவலர் இனங்கள் 3,4,5 ஆகியவற்றிற்கான தகவல்கள் எந்த அலுவலகத்தில் பராமரிப்பில் உள்ளது என்பதைக் கண்டறிந்து, அத்தகவல்களை மேற்படி அலுவலகத்திலிருந்து கோரிப்பெற்று, ஒரு மாத காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையையும் ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டு, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 21350/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
செங்கல்பட்டு.

**<u>மனுதாரர்:-</u>**
திரு வி. அலெக்ஸ்பாண்டியன்,
த/பெ செ.வின்செனட்,
4/181, நீலசந்து தெரு,
மெய்யூர், சட்ராஸ்,
கல்பாக்கம் 603 102.

Copy to: File TK/PS